வறுமையில் வாடும் 5 லட்சம் ஏழைக் குடும்பங்களை மீட்டெடுக்கும் புதுத் திட்டம்: மு.க.ஸ்டாலின் விரைவில் தொடங்கி வைக்கிறார்

சென்னை, மே 23–

ஏழ்மையில் வாடிய நிலையில் வாழும் 5 லட்சம் ஏழை குடும்பங்களை கண்டறிந்து அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில் தாயுமானவர் திட்டத்தை முதலமைச்சர் ஸ்டாலின் அடுத்த மாதம் துவக்கி வைக்கிறார்.

கடந்த பட்ஜெட் தொடரின் போது தமிழகத்தில் வறுமையை குறைக்கும் விதமாக முதல்வரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2024–25ம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை அப்போது தாக்கல் செய்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு இந்த திட்டத்துக்காக ரூ.27,922 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது என்றும் அடுத்த 2 ஆண்டுகளில் இது ஏறக்குறைய 5 லட்சம் ஏழைக் குடும்பங்களை வறுமையில் இருந்து உயர்த்த இந்த திட்டம் உதவும் என்றும் தெரிவித்திருந்தார்.

தமிழகத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பல சமூக நல திட்டங்களால் வறுமையை குறைப்பதில் மிகச்சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு வந்தாலும் தாயுமானவர் திட்டம் மூலம் மிகவும் வாடிய நிலையில் வசிக்கும் ஏழை குடும்பங்களை கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றம் அடைய செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த திட்டத்தை அடுத்த மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

வாழ்க்கை தரத்தை உயர்த்த...

இதுகுறித்து ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் வறுமையை குறைப்பதில் மிகச்சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. இதை அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசின் 'நிதி ஆயோக்' சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் மக்களின் சதவீதம் தமிழகத்தில் 2.2 சதவீதம் மட்டுமே என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் வாடிய நிலையில் வாழும் ஏழை குடும்பங்களை கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதற்காகவே முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதரவற்றோர், தனித்து வசிக்கும் முதியோர், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்பு குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் என சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்படுவார்கள்.

அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமின்றி, கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். அரசிடம் உள்ள தரவுகள், கள ஆய்வு மக்கள் பங்கேற்புடன் கலந்துரையாடல், கிராம சபை ஆகியவற்றின் வழியாக மாநிலம் முழுவதும் மிகவும் ஏழ்மையில் உள்ள குடும்பங்கள் கண்டறியப்பட உள்ளது.

இத்திட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்கேற்பு உறுதி செய்யப்படும். அது மட்டுமின்றி முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தில் ஏழை குடும்பங்களை எந்த அடிப்படையில் எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பது பற்றி ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு பயிற்சியும் அளிக்க இருக்கிறோம்.

அடுத்த மாதம் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வந்த பிறகு இந்த திட்டத்துக்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். அதன் பிறகு இந்த திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்.

முதலில் சோதனை அடிப்படையில் 5 மாவட்டங்களில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு இறுதிக்குள் 7,682 புதிய பஸ்கள்: அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, மே.23

'தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் 7 ஆயிரத்து 682 புதிய பஸ்களும், 1,500 கூண்டு புதுப்பிக்கப்பட்ட பஸ்களும் இயக்கப்படும்' என்று அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

தி.மு.க அரசு ஆட்சிக்காலங்களில் அரசு போக்குவரத்து கழகங்களின் செயல்பாடுகள் குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அண்ணாதி.மு.க. அரசு கடந்த 2011–2021 வரை ஆண்டுக்கு 1,449 பஸ்கள் வீதம் 10 ஆண்டுகளில் 14 ஆயிரத்து 489 புதிய பஸ்களை அறிமுகப்படுத்தியது. அத்துடன் போக்குவரத்து கழகங்களுக்கு ஆண்டுக்கு ரூ.2,349.47 கோடி வீதம் ஆண்டுக்கு ரூ.23,494.74 கோடி வழங்கியது. ஆனால் தி.மு.க அரசு 2006–2011 வரை ஆண்டுக்கு 3001 பஸ்கள் வீதம் 5 ஆண்டுகளில் 15 ஆயிரத்து 5 பஸ்கள் வாங்கியது. அத்துடன் போக்குவரத்து கழகங்களுக்கும் 2021–2024 ஆண்டுக்கு ரூ.7,375.68 கோடி வீதம், 4 ஆண்டுக்கு ரூ.29,502.70 கோடி வழங்கி உள்ளது.

கொரோனா தொற்று காலத்தில் புதிய பஸ்கள் வாங்காததால், தற்போது ஆயுட்காலம் முடிந்த பஸ்களை கழிவு செய்துவிட்டு புதிய பஸ்களை மாற்ற வேண்டி உள்ளது. கோர்ட்டு அறிவுரையை ஏற்று, ஜெர்மன் வளர்ச்சி வங்கி மூலம் 2 ஆயிரத்து 213 டீசல், 500 மின்சார பஸ்கள் கொள்முதல் செய்யவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை மூலம் தற்போது கூண்டு கட்டுவதிலும், ஒப்பந்த நிலையிலும் உள்ளது.

2024–2025ம் ஆண்டு இறுதிக்குள் 7 ஆயிரத்து 682 புதிய பஸ்களும், 1,500 கூண்டு புதுப்பிக்கப்பட்ட பஸ்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் 300க்கும் அதிகமான புதிய பஸ்கள் பயன்பாட்டிற்கு வந்து கொண்டு இருக்கிறது.

பெண்களுக்கு கட்டணமில்லா பயணச் சேவை தொடங்கப்பட்டு, இதுவரை பெண்கள் 473.61 கோடி பயண நடைகளும், திருநங்கைகள் 28.62 லட்சம் பயண நடைகளும், மாற்றுத்திறனாளிகள் அவர் உதவியாளர்கள் 3.78 கோடி நடைகளும் பயனடைந்துள்ளனர்.

தற்போது 1.76 கோடி பயணிகள் தினசரி பயணிக்கின்றனர். முந்தைய அரசு காலத்தில் பஸ் விபத்தினால் ஆண்டுக்கு 1,201 உயிரிழப்புகள் ஏற்பட்டது. ஆனால், தற்போது 911 ஆக குறைந்துள்ளது.

இந்த எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல், கடந்த 1998ம் ஆண்டு முதல் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு மாத ஓய்வூதியம் அமல்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு வழங்கிய மாறும் அகவிலைப்படியை மாற்றி தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு இணையாக சதவீத அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்பட்டது.

போக்குவரத்து கழகங்களின் வரவுக்கும், செலவுக்குமான பற்றாக்குறை நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வரும் நிதி ஆண்டுகளிலும், புதிய பஸ்கள் வாங்கப்பட்டு பழைய பஸ்களை கழிவு செய்ய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டுவதில் டாக்டர்களுக்கு விதிவிலக்கு: ஐகோர்ட்

சென்னை, மே 23–

வாகனங்களில் டாக்டர் என ஸ்டிக்கர்' ஒட்டியிருக்கும் டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என சென்னை ஐகோர்ட் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

வாகனங்களில், 'காவல் துறை, அரசு, ஊடகம், வழக்கறிஞர், டாக்டர் என ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது; மீறினால் அபராதம் விதிக்கப்படும்' என, சென்னை போக்குவரத்து போலீசார் சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பில் இருந்து, டாக்டர்களுக்கு விலக்களிக்க கோரி, தமிழ்நாடு மருத்துவர்கள் நல சங்கத்தின் பொது செயலர் டாக்டர் கே.சீனிவாசன் சார்பில், சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி.பி.பாலாஜி, ''மருத்துவ அவசரத்துக்காக செல்லும் டாக்டர்களுக்கு ஸ்டிக்கர் ஒட்ட விலக்கு அளிக்க லாமே? வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் ஸ்டிக்கர் வழங்குவது போல, டாக்டர்களுக்கும் வழங்குவது குறித்து, தேசிய மருத்துவ கமிஷனிடம் கருத்து கேட்கலாமே,'' என்றார்.

அதற்கு, 'தேசிய மருத்துவ கமிஷனையும் வழக்கில் இணைக்க வேண்டும்' என, அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, தேசிய மருத்துவ கமிஷன் மற்றும் தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலையும் வழக்கில் சேர்க்கும்படி மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை ஜூன் 14க்கு தள்ளிவைத்தார்.

மேலும், அதுவரை வாகனங்களில் டாக்டர் என ஸ்டிக்கர் ஒட்டியிருந்தால் நடவடிக்கை எடுக்கக் கூடாது. இது இடைக்கால உத்தரவு; தேசிய மருத்துவ கமிஷன் வாதத்தை கேட்ட பின், வழக்கில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்.

'ஸ்டிக்கரை டாக்டர்கள் தவறாக பயன்படுத்தினாலோ அல்லது டாக்டர் ஸ்டிக்கர் ஒட்டி இருக்கும் வாகனங்கள் சந்தேகிக்கும் முறையில் இருந்தாலோ, போலீசார் உரிய நடவடிக்கை எடுக்கலாம். வாகனத்தின் முன் பக்கம் அல்லது பின் பக்கம் தவிர, நம்பர் பிளேட் உள்ளிட்ட இடங்களில் ஒட்டியிருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்' என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

15 என்ஜினீயரிங் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை அங்கீகாரம் ரத்து: அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்

சென்னை, மே.23–

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் 450க்கும் அதிகமான என்ஜினீயரிங் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதற்கான, 2024–25ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்ப பதிவு கடந்த 6ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. மாணவ, மாணவிகள் என்ஜினீயரிங் படிப்புக்கு ஆர்வத்துடன் விண்ணப்பித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், 15 கல்லூரிகளில் 2024–25ம் கல்வியாண்டின் முதலாம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெறாது என்று பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறியதாவது:

தற்போது, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) மீது மாணவர்களுக்கு ஆர்வம் அதிகரித்துள்ளது. கடந்த கல்வியாண்டில், முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை குறைவாக இருந்த 11 கல்லூரிகளுக்கு, 2024–25ம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

அதேபோல், மேலும் 4 கல்லூரிகள், மாணவர் சேர்க்கை குறைவாக உள்ளதால் கலந்தாய்வில் பங்கேற்கவில்லை என்று தெரிவித்துள்ளன. இதனால், 15 என்ஜினீயரிங் கல்லூரிகள் கலந்தாய்வில் பங்கேற்காது. மாணவர் சேர்க்கை நடைபெறாது.

இவ்வாறு அவர் கூறினார்.

சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்

SAYAJI Yo.ns. Tr.ih.

CIN - U55209TN2018PLC122598

பதிவு அலுவலகம்: எப்1 சி3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை, கீழ்க்கட்டளை, காஞ்சிபுரம், தாம்பரம் தமிழ்நாடு– 600 117, இந்தியா

Tel. No. - 044-29871174, Email Id - cs@shilindore.com , Website:www.shilindore.com

6வது வருடாந்திர பொதுக் கூட்டம் குறித்த தகவல்

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் ("MCA") மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவால் ("SEBI") வெளியிடப்பட்ட விஷயத்தில் பொருந்தக்கூடிய அனைத்து சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்ட அழைப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்ய கம்பெனியின் உறுப்பினர்களுக்கான ஆறாவது வருடாந்திர பொதுக் கூட்டம் ("AGM") கானொளி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சி முறை ("OAVM") மூலம் திங்கட்கிழமை, 24 ஜூன், 2024 அன்று மாலை 3.00 மணிக்கு (இந்திய நேரப்படி) நடைபெறும். வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் 2023–24 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், குழு அறிக்கை, தணிக்கையாளர்களின் அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய பிற ஆவணங்கள் ஆகியவை கம்பெனியின் உறுப்பினர்களுக்கு யாருடைய மின்னஞ்சல் முகவரி கம்பெனி / டொபாசிட்டரி பங்கேற்பாளர் (கள்) உடன் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அவர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்படும். வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.shilindore.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் ("BSE") www.bseindia.com என்ற இணையதளத்திலும் கிடைக்கும்.

மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யும் / புதுப்பிக்கும் முறை:

1. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், கோரிக்கை கடிதத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் மற்றும் போலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆதார் அட்டை நகல்) போன்ற தேவையான விவரங்களை நிறுவனம்/ஆர்டிஏ மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி பதிவு செய்யலாம் மற்றும் புதுப்பிக்கலாம்.
2. மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணைப் உங்கள் டொபாசிட்டரி பங்கேற்பாளருடன் (DP) புதுப்பிக்கலாம்.
3. மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர் உங்கள் மின்னஞ்சல் முகவரி & மொபைல் எண்ணைப் உங்கள் டொபாசிட்டரி பங்கேற்பாளருடன் (DP) புதுப்பிக்கலாம். இது மின்னணு வாக்களிப்பின் போது மற்றும் காணொளி கூட்டங்களில் கலந்து கொள்ள கட்டாயமாகும்.

மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் முறை:

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வணிகங்கள் மீது உறுப்பினர்கள் தங்கள் வாக்கை(களை) மின்னணு வாக்குப்பதிவு முறை ("e–voting") மூலம் அளிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு ("remote evoting") உள்ளிட்ட வாக்களிக்கும் முறை, மின்னணு வடிவில் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கும், தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காமல் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக் கூட்ட காலத்தில் மின்னணு முறையில் வாக்களிக்க முடியும்.

குழு உத்தரவுப்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
ரவூப் ரசாக் தானானி
இயக்குனர்
DIN: 00174654

தேதி: 23.05.2024
இடம்: சென்னை

கட்டுமானத் துறையில் ஈடுபட்டு வரும்

M/s. க்ரீன் வேலி'ஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் தீர்மான திட்டங்கள் வரவேற்பு

(தேசிய கடன் தீர்க்க வகையந்தோர் மற்றும் நொடிப்பு நிலை வாரியத்தின் ஒழுங்கு விதிகள், 2016ன் (பெருநிறுவன நபர்கள் நொடிப்பு நிலை செயல்முறை தீர்மானம்) ஒழுங்கு விதி 36A துணை விதி (1)ன் கீழ்)

தொடர்புடைய தகவல்கள்

1	பெருநிறுவன கடனாளர் பெயர் PAN / CIN/ LLP எண்.	M/s. க்ரீன் வேலி'ஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் CIN: U45201TN2004PTC052266 PAN: AACCG0749F
2	பதிவு அலுவலக முகவரி	எண். 9, 1வது தளம், பிஷப் வாலர்ஸ் அவென்யூ (கிழக்கு), மயிலாப்பூர், சென்னை தமிழ்நாடு 600004
3	இணையதள URL	https://greenvalleys.in/
4	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	திவால்நிலை தொடங்கும் தேதியில் (ICD), நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ளன.
5	முக்கிய தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	நிறுவனத்தின் திட்டங்கள்: ஜிவிஎஸ்பிஎல் ரக்ஷா, ஜிவிஎஸ்பிஎல் ராஜகுரு, க்ரீன் க்ரெஸ்ட், ஜிவிஎஸ்பிஎல் மஹாமேரு, க்ரீன் பார்க், ஜிவிஎஸ்பிஎல் க்ரீன் கவுண்டி.
6	கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட முக்கிய தயாரிப்புகள் / சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு	கடைசியாக கிடைத்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி 2019-20 நிதி ஆண்டின் வருவாய் ரூ.24,10,06,047.82/-
7	பணியாளர்கள் / ஊழியர்களின் எண்ணிக்கை	15 ஊழியர்கள் (திட்டம் நடைபெறும் இடங்களில் உள்ளவர்கள் உட்பட)
8	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன் வழங்கியவர்களின் பட்டியல்கள், செயல்முறையின் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கான தொடர்புடைய தேதிகள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் இங்கே கிடைக்கின்றன:	eoi.gvspi@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைப் பெறலாம்
9	குறிமீடு பிரிவு 25(2)(ஈ)–ன் கீழ் தீர்மான விண்ணப்ப தாரர்களுக்கான தகுதி இங்கே கிடைக்கிறது:	eoi.gvspi@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைப் பெறலாம் விருப்ப வெளிப்பாடு நிறுவனம் முழுவதற்குமாக அல்லது திட்டம்/களுக்காக சமர்ப்பிக்கப்படலாம்.
10	விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான கடைசி தேதி	07 ஜூன் 2024
11	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி	10 ஜூன் 2024
12	தற்காலிகப் பட்டியலில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	15 ஜூன் 2024
13	வருங்காலத் தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி	17 ஜூன் 2024
14	தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி, மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தீர்வு திட்டங்களுக்கான கோரிக்கை	18 ஜூன் 2024
15	தீர்வு திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	18 ஜூலை 2024
16	EOIஐ சமர்ப்பிப்பதற்கான மின்னஞ்சல் முகவரி	eoi.gvspi@gmail.com

தேதி : 23.05.2024
இடம் : சென்னை

ஒப்பம்/–
அனுஜா பட்
நியமிக்கப்பட்ட இயக்குனர்
M/s வாட்டர்ஃபால் இன்சால்வென்சி புரொபெஷனல்ஸ் பிரைவேட் லிமிடெட்
க்ரீன் வேலி'ஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் தீர்மான நிபுணர்
பதிவு எண்: IBBI/IPE-0022/IPA-1/2022-23/50016
AFA: AA1/50016/02/171224/20006 valid upto 17.12.2024
பதிவு அலுவலகம்: 1204/1221, **மேக்கர் சேம்பர் V, ஜம்னாலால் ஜமாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை** 400021.

பொது அறிவிப்பு

கதவு எண்.5/3, ரங்கையா செட்டி தெரு, குளை, சென்னை-600 112 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.விஜயலக்ஷ்மி.S, க/பெ. திரு. சவரிநாதன்.SP, 42 வயதுடைய எங்களது கட்சிக்காரர் பழைய எண்.20, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, வேப்பேரி (வரி மதிப்பீட்டின் படி பழைய எண்.27, புதிய எண்.32, குட்டித் தெரு), புரசைவாக்கம், சென்னை என்ற முகவரியில் பிளாக் எண்.28, புரசைவாக்கம் கிராமத்தில் பட்டாவின் படி 1224 சதுர அடி பரப்பளவு நிலம். ஆவணத்தின் படி பழைய சர்வே எண்.1957, பட்டாவின் படி மறு சர்வே எண்.1817-ல் உள்ள 1300 சதுரஅடி நிலம் மற்றும் கட்டிட சொத்திற்கான முழு உரிமையாளர் ஆவார்.

மேற்குறிப்பிட்ட சொத்திற்கு தொடர்புடைய 23.11.1941 தேதியிட்ட மேற்கு மெட்ராஸ் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தீர்வு பத்திர ஆவண எண். 2234/1941-ன் தீர்வு பத்திரத்தின் அசல் மூல பத்திரம் தொலைந்து விட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள சொத்து எந்தவித வில்லங்கமும் இல்லாமல் எங்களது கட்சிகாரரின் சுவாதீனத்தில் உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள சொத்தின் மீது யாருக்கேனும் ஏதேனும் உரிமை கோரல் அல்லது பாத்தியதை இருந்தால் இந்த பொது அறிவிப்பு வெளியான 7 தினங்களுக்குள் அவர்கள் தங்களது உரிமைக்கோரல்களை தகுந்த ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த சொத்தின் மீது 7 தினங்களுக்குள் யாரிடம் இருந்தும் உரிமைகோரல் பெறப்படவில்லை எனில் இந்த சொத்தின் மீது எந்த வில்லங்கமும் இல்லை என்று கருதப்படும். மற்றும் குறிப்பிட்டுள்ள சொத்தின் மீது யாரும் எந்தவித உரிமையையும் கோரமுடியாது என கருதப்படும்.

மாலதி அசோசியேட்ஸ்
ப்ளாட் எண்கள்.1 & 2, தரைதளம், தர்ஷன் அப்பார்ட்மெண்ட், கதவு எண்.9, டாக்.டர். திருமூர்த்தி நகர், நுங்கம்பாக்கம், சென்னை-600 034. போன்: 044 - 49785883

கும்பத் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 5வது மாடி, கும்பத் காம்ப்ளக்ஸ், எண் : 29, ரட்டன் பஜார், சென்னை – 600 003.
தொலைபேசி எண் : 044-2533 2173; மின்னஞ்சல் முகவரி : cs@kumbhatfinancialserviceslimited.com
CIN : L65991TN1993PLC024433

31 மார்ச் 2024ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சங்களில்)

வ. எண்.	விவரங்கள்	காலாண்டு முடிவுகள்			ஆண்டு முடிவுகள்	
		31.03.2024 (தணிக்கை ஆனது)	31.12.2023 (தணிக்கை ஆகாதது)	31.03.2023 (தணிக்கை ஆனது)	31.03.2024 (தணிக்கை ஆனது)	31.03.2023 (தணிக்கை ஆனது)
1	செயல்பாடுகளின் மூலம் மொத்த வருவாய்	8.96	9.07	9.43	33.99	33.25
2	நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் / (நஷ்டம்) (வரி, மற்றும் விதி விலக்கான பொருட்களுக்கு முன்)	(195.11)	8.34	5.17	(171.98)	11.01
3	நடப்புக் காலத்திற்கான வரிக்கு முந்தைய நிகர இலாபம் / (நஷ்டம்) (விதி விலக்கான பொருட்களுக்கு பின்)	(195.11)	8.34	5.17	(171.98)	11.01
4	நடப்புக் காலத்திற்கான வரிக்கு பிந்தைய நிகர இலாபம் / (நஷ்டம்) (விதி விலக்கான பொருட்களுக்கு பின்)	(198.62)	7.05	4.34	(179.22)	9.63
5	நடப்புக் காலத்திற்கான வரிக்கு பிந்தைய மொத்த விரிவான வருமானம் {நடப்புக் காலத்திற்கான வரிக்கு பிந்தைய இலாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் மற்ற விரிவான வருமானத்தை உள்ளடக்கியது}	(198.62)	7.05	4.34	(179.22)	9.63
6	சமபங்கு மூலதனம்	475.00	475.00	475.00	475.00	475.00
7	ரிசர்வுகள் மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக, முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி	(211.55)				
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.10/- ஒரு பங்குக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு)					
	1. அடிப்படை	(4.18)	0.15	0.09	(3.77)	0.20
	2. டைலுட்டட்	(4.18)	0.15	0.09	(3.77)	0.20

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய SEBI (பட்டியல் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதி 52 மற்றும் விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் மற்றும் பட்டியலிடப்பட்டுள்ள கம்பெனியின் இணையதளங்களில் கிடைக்கும். (www.kumbhatfinancialserviceslimited.com)
2. முந்தைய காலத்திற்கான தொகைகள் தேவைப்படும் இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன / மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கும்பத் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டுக்காக
சஞ்சய் கும்பத்
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 22.05.2024

MPS எம்பிஎஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 4வது தளம், R.R. டவர்ஸ் IV, சூப்பர் ஏ, திரு.வி.க இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை–600 032
கார்ப்பரேட் அலுவலகம்: ஏ–1, டவர் ஏ, 4வது தளம், வின்ட்சர் ஐடி பார்க், செக்டார் 125, நொய்டா, உத்தரப்பிரதேசம் 201 303.
CIN: L22122TN1970PLC005795
Tel: +91 44 49162222, Fax: +91 44 49162225, Email: investors@mpslimited.com, Website: www.mpslimited.com

31 மார்ச் 2024ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில், ஒரு சம பங்கு விவரம் நீங்கலாக)

விவரங்கள்	தனியானது			ஒருங்கிணைந்தது		
	முடிந்த காலாண்டு 31 மார்ச் 2024 (தணிக்கையானது)	முடிந்த ஆண்டு 31 மார்ச் 2024 (

உலக சமுதாய சேவா சங்கத்தின் கிராமிய சேவை திட்ட தொடக்க விழா: ராம்ராஜ் கே.ஆர்.நாகராஜன் பங்கேற்பு

திருப்பூர், மே 23– உலக சமுதாய சேவா சங்கத்தின் கிராமிய சேவை திட்ட தொடக்க விழா இடுவாய் ஊராட்சி பாரதிபுரம் பகுதியில் நடைபெற்றது. இவ்விழாவில் உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத்தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவன தலைவருமான கே.ஆர்.நாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இடுவாய் ஊராட்சித் தலைவர் கணேசனுக்கும் மற்றும் அனைத்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் நினைவு பரிசு வழங்கினார். பின்னர் அவர் அப்பகுதி கிராம மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கினார். மேலும் தனது வாழ்த்துரையில் கிராம மக்களுக்கு மனவளக்கலையின் அவசியத்தை எடுத்துரைத்து வாழ்த்துரை வழங்கினார்.

இடுவாய் கிராம மக்கள் அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் மனவளக்கலை பயிற்சிகளை வழங்குவதற்கான செலவுகளை ராம்ராஜ் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருப்பூர் மாநகராட்சி கே.எஸ்.சி அரசு மேல்நிலைப்பள்ளியில் 10, 11 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சியடையாத மாணவர்களுக்காக நடைபெற்று வரும் சிறப்பு பயிற்சி வகுப்பினை கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி கமிஷனர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் கீதா ஆகியோர் உள்ளனர்.

பாலக்கோடு எம்ஜிஆர் அரசு கலை கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கு காலஅவகாசம் நீட்டிப்பு

தருமபுரி, மே 23– தருமபுரி மாவட்டம் பாலக்கோடு எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2024 – 25ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வி இயக்குநரின் அறிவிப்பின்படி, 2024–25 ஆம் கல்வி ஆண்டுக்கான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்வதற்கான சேர்க்கை விண்ணப்பங்கள் 6.5.2024 அன்று முதல் 20.5.2024 வரை www.tngasa.in என்ற இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, 6.5.2024 முதல் பாலக்கோடு, பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை மேற்கண்ட இணையதள முகவரிகள் மூலம் விண்ணப்பிக்கும் பொருட்டு கல்லூரி மாணவர் சேர்க்கை உதவிமையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க கல்லூரிக் கல்வித் துறை 24.5.2024 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, +2 தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் கல்லூரி சேர்க்கை விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட முறைகளில் விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பி.ஏ., தமிழ், பி.ஏ., ஆங்கிலம், பி.ஏ., வரலாறு, பி.ஏ., பொருளியல், பி.ஏ., பொது நிர்வாகம், இளநிலை சமூகப்பணி, பி.எஸ்சி., கணிதவியல், பி.எஸ்சி., இயற்பியல், பி.எஸ்சி., வேதியியல், பி.எஸ்சி., தாவரவியல், பி.எஸ்சி., விலங்கியல், பி.எஸ்சி., கணினிஅறிவியல், பி.எஸ்சி., உளவியல், பி.எஸ்சி., புள்ளியியல், பி.எஸ்சி., ஊட்டச்சத்து மற்றும் உணவுக்கட்டுப்பாடு பி.எஸ்சி., நுண்ணுயிரியல், பி.எஸ்சி., மின்னணு மற்றும் தொடர்பியல், இளவணிகவியல், இளவணிக நிர்வாகவியல்,

இக்கல்லூரியில் இளங்கலை, தமிழ் பாடப்பிரிவு தவிர ஏனைய அனைத்தும் ஆங்கில வழி பாடப்பிரிவுகளாகும்.

இக்கல்லூரியில் மேற்குறிப்பிட்ட 19 பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கை நடைபெறவுள்ளது. எனவே, இந்த வாய்ப்பினை மாணவ, மாணவியர் பயன்படுத்திக் கொள்ளுமாறு பாலக்கோடு எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் (பொ) தீர்த்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கால்டெக்ஸ் லூப்ரிகண்ட்ஸ் விளம்பர தூதராக கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜா ஒப்பந்தம்

கோவை, மே 23– கால்டெக்ஸ் லூப்ரிகன்ட்ஸ் தனது விளம்பர தூதராக இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜாவை நியமித்துள்ளது. இந்த பிரத்தியேக பிரதிநிதித்துவத்தின் மூலம், 'கால்டெக்ஸ் யானி கமிட்மென்ட்' என்ற பிராண்டின் கோஷத்துடன், இந்தியா முழுவதும் கால்டெக்ஸ் லூப்ரிகண்டுகளை பற்றி மக்கள் அறிவதை மேம்படுத்த, கிரிக்கெட் விளையாட்டில் ஜடேஜாவின் பிரபலத்தைப் பயன்படுத்துவதை இந்த பிராண்ட் நோக்கமாகக் கொண்டுள்ளது.

செவ்ரான் இன்டர்நேஷனல் புராடக்ட்ஸ் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஆதரவு பொது மேலாளர் மார்க் பௌசெப்ல் கூறுகையில், "இந்தியாவில் கால்டெக்ஸ் லூப்ரிகண்ட்ஸ் பிராண்ட் தூதராக ரவீந்திர ஜடேஜாவை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். விளையாட்டு மற்றும் வெற்றிக்கான அவரது ஆர்வமும் அர்ப்பணிப்பும்

கால்டெக்ஸ் பிராண்ட் கொண்டுள்ள மதிப்புகளுடன் தடையின்றி ஒத்துப்போகிறது.

அவரது ஆதரவுடன், இந்தியா முழுவதும் அதிக வாடிக்கையாளர்களைச் சென்றடைவதையும், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆல் ரவுண்டர் லூப்ரிகண்டுகளின் வழங்குநராக கால்டெக்ஸின் நிலையை வலுப்படுத்துவதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்." என்றார்.

ரவீந்திர ஜடேஜா கூறுகையில், "அர்ப்பணிப்பு மற்றும் அதன் அனைத்து வகையான திறன்களையும் வெளிப்படுத்தும் பிராண்டான கால்டெக்ஸ் உடன் இணைந்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கால்டெக்ஸ் லூப்ரிகண்டுகள் மற்றும் அவற்றின் ஈடு இணையற்ற செயல்திறனின் அங்கீகாரத்தை கட்டமைப்பதை நான் எதிர்நோக்குகிறேன் என்றார்.

தருமபுரி கலெக்டர் அலுவலகத்தில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளன்று மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து போலீஸ் சூப்பிரண்டு, மாவட்ட வருவாய் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் பிரிவு அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான சாந்தி தலைமையில் நடைபெற்றது.

சீமைக்கருவேல் மரங்கள் அகற்றும் பணிகளை விரைந்து முடிக்க கலெக்டர் தங்கவேல் உத்தரவு

கரூர், மே 23– கரூர் மாவட்டம் பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் சீமைக்கருவேல் மரங்கள் அகற்றப்படும் பணிகள் மற்றும் கூட்டு குடிநீர் திட்டத்தின் பணிகளை கலெக்டர் தங்கவேல் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்குப் பின் அவர் தெரிவித்ததாவது: பரமத்தி ஊராட்சி ஒன்றியம் நடந்தை ஊராட்சி வெள்ளியம்பாளையம் மற்றும் ஆரியூரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு சீராக வழங்கப்பட்டு வரும் குடிநீரின் தரம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக, கரூர் மாவட்டம் பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நடந்தை ஊராட்சியில் சீமைக்கருவேல் மரங்கள் அகற்றப்படும் பணியினையும் பார்வையிட்டு, அந்தப் பகுதியில் புதியதாக மரக்கன்றுகளை அதிகளவில் நட்டு அதை நன்கு பராமரிக்க வேண்டுமெனவும் மற்றும் சீமைக்கருவேல் மரங்கள் அகற்றப்படும் பணியினை உரிய கால அளவில் முடிக்க அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் தங்கவேல் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் (ஈடுபெற்ற மற்றும் ஈடுபெறாத கடன் வணிகப் பிரிவு)
(முத்தூட் பாப்பச்சன் குழும நிறுவனம்) CIN : U65929KL1997PLC011518
நிர்வாக அலுவலகம்: 710A & 711A, 7வது தளம், பேஸ் 2, ஸ்பென்சர் பிளாசா, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 600002
பதிவு அலுவலகம்: முத்தூட் சென்டர், டிசி எண் 27/3022, புன்னன் சாலை, திருவனந்தபுரம், கேரளா 695 001

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (2) ன் கீழ் அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (12) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ், கீழ்க்கையொப்பமிட்டுள்ள முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்டின் (MFL) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் கீழ்க்கண்ட கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு டிமாண்ட் நோட்டீஸ்களை அனுப்பி மற்றும் உங்களுக்கு மாற்று சேவை மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பினை வெளியிட்டு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். கடனை திரும்ப செலுத்துவதற்காக மேற்சொன்ன கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோர் கீழ்க்கண்ட ஈடு பெற்ற ஆஸ்திகளை எம்எப்எல் வசம் அடமானமாக வைத்துள்ளனர்.

வ. எண்	கடன்தாரர்/ உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி என்பிஏ தேதி	செலுத்த வேண்டிய மொத்த தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள்/அசையா சொத்துக்கள் விவரம்
1.	(கடன் கணக்கு எண். MFLTAM SECUL00000503 1254) முகமது அபுபக்கர் எஸ் (கடன்தாரர்) திருமதி.லுபீனா எம். (உடன் கடன்தாரர்) இருவரும் வசிக்கும் முகவரி: எண். 102/99B, கலைமகள் தெரு, குமாரபாளையம், திருச்செங்கோடு, கோவிலுக்கு அருகில் நாமக்கல், சேலம் தமிழ்நாடு 638183	10.05.2024 05.05.2024	10.05.2024 அன்று ரூ.23,09,961.77/–	நாமக்கல் பதிவு மாவட்டம், குமாரபாளையம் சார் பதிவு மாவட்டம், குமாரபாளையம் தாலுக்கா, குமாரபாளையம் அமானி கிராமம், நத்தம் சர்வே எண். 626/2ல் உள்ள புஞ்சை ஏக்கர் 660 சதுர அடி (அல்லது) 61.34 சதுர மீட்டர் வீட்டு மனை, கீழ்க்கண்ட எல்லைகள் : மேற்கில் டி.ஆர். வெங்கடேசன் சொத்து மற்றும் தெற்கு வடக்காக பொதுச் சுவர், கிழக்கில் தெற்கு வடக்காக கலைமகள் தெரு, தெற்கில் லிங்கி செட்டியார் வீடு மற்றும் வடக்குப் பக்கம் கிழக்கு மேற்காக பொது சந்து, வடக்கில் டி.ஆர். வெங்கடேசன் சொத்து மற்றும் கிழக்கு மேற்காக பொதுச் சுவர். இதன் விஸ்தீரணம் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 60 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 11 அடி. மொத்தம் 660 சதுர அடி (அல்லது) 61.34 சதுர மீட்டர் வீட்டு மனை மற்றும் கட்டிடங்கள், அனைத்து அறைகள், கதவுகள், பொருத்தப்பட்ட கதவுகள், மின் சாதனங்கள், உயில், மின்சார சேவை இணைப்பு, வழக்கமான பாதை, பொதுவான சாலை, பொதுவான உரிமைகள் போன்றவை, TNEB S.C.No.156/009/292, குடிநீர் வரி மதிப்பீட்டு எண்.1100. இந்த சொத்து குமாரபாளையம் நகராட்சி பழைய வார்டு எண்.10, புதிய வார்டு எண்.6, தற்போதைய நகராட்சி புதிய வார்டு எண்.30, டி.எஸ்.எண். 12, கலைமகள் தெரு, கதவு எண்.99ல் உள்ளது. அதன் சொத்து வரி மதிப்பீடு எண். 25124.

மேற்சொன்ன கடன்தாரர்கள் எம்எப்எல்–க்கு தொகையை செலுத்த தவறினால், சட்டப்பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது நடவடிக்கையை எம்எப்எல் மேற்கொள்ளும். அதற்காக ஏற்படும் செலவுகள் மற்றும் விளைவுகள் கடன்தாரர்களையே சாரும். மேற்சொன்ன கடன்தாரர், உடன்கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் SARFAESI சட்டத்தின் பிரிவு 13ன் துணைப்பிரிவு (13) விதியின் கீழ் எம்எப்எல் முன் அனுமதியின்றி, மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல், குத்தகைக்கு விடுதல் போன்ற மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

இடம்: தமிழ்நாடு
தேதி: 23.05.2024

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்டுக்காக

பொது அறிவிப்பு

கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட் (KMBL) ஆகிய நாங்கள், எமது வங்கி மற்றும் பிற தொடர்புடைய வியாபாரங்களுடன் அதன் ஒரு கிளை / அலுவலகத்தினைத் திறப்பதுடன் சேர்த்து, கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டதும், கதவு எண்.242, எம்.ஜி.ரோடு, புதிய பேர்லேண்ட்ஸ், சேலம் – 636 016 வசித்து வரும் திருபன்னாலால் ராதோர் மகன் **திரு.மஹாவீர் குமார் ராதோருக்குச்** சொந்தமானதுமான ஒரு சொத்தைக் குத்தகைக்கு எடுக்க உள்ளோம். இதன் உரிமையாளர் இச்சொத்து மற்ற எந்த நிதி நிறுவனங்களிடமோ, அல்லது வங்கிகளிலோ அடமானம் வைக்கப்படவில்லை என உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனால் அனைத்துப் பொதுமக்களுக்கும், தொடர்புடையவர்கள், தனி நபர்கள், அரசு/அரசு சார்பு நிதி நிறுவனங்கள்/அமைப்புகள்/ஆணையங்கள் எதற்கேனும் ஏதேனும் உரிமை, ஆவண உரிமை, ஈடுபொடு அல்லது சொத்தில் பங்கு இருப்பின் கீழே குறிப்பிட்ட சொத்தைப் பொறுத்தவரை அல்லது மேற்படி பரிமாற்றத்தில் ஏதேனும் மறுப்புத் தெரிவிக்க விரும்பும் எவராகினும், தங்களது மறுப்பினை (மறுப்புகளை) எழுத்து மூலம் அதற்கான அனைத்து ஆவண ஆதரவு நகல்களுடன் இந்தப் பொது அறிவிப்பு வெளியிடப்பட்ட ஏழு தினங்களுக்குள் தெரிவிக்கக் கோரி பொதுவான இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலருக்கு இந்தப் பொது அறிவிப்பு வெளியீட்டின் ஏழு தினங்களுக்குள் அனைத்து ஆதரவு ஆவணங்களுடனான எழுத்து மூல மறுப்பு கிடைக்கப்பெறவில்லை எனில் இந்தச் சொத்துகளின் மீதுவில்லங்கம்ஏதுமில்லைஎனக்கருதப்படுவதோடு,அத்தகையதொர்புடைய அனைத்துஉரிமைகளும்தள்ளுபடிசெய்யப்படும்எனவும்,அதன்பின்னர்பெறப்படும்எத்தகைய மறுப்பு எழுப்புதலும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ஏற்கப்படாது என்பதுடன் நாங்கள் குத்தகை ஒப்பந்தம் அல்லது அது போன்ற ஒப்பந்தங்களை நிறைவேற்ற மேல் நடவடிக்கை மேற்கொள்வோம் எனவும் அதன் பின்னர் அத்தகைய நபர்களிடமிருந்து பெறப்படும் இந்தப் பரிமாற்றம் தொடர்புடைய எந்த ஒரு மறுப்பும் ஏற்கப்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணைச் சொத்தின் விவரம்

அலுவலக வளாகமாகிய வணிகச் சொத்தின் கதவு எண்.252, 30, பிருந்தாவன் ரோடு, பேர்லேண்ட்ஸ், சேலம் – 636 016 ல் வரிவிதிப்பு எண்.339 உடன் 62வது பிளாக், E வார்டு, அழகாபுரம் கிராம டவுன் சர்வே எண்.17, உட்பிரிவு க.ச.எண்.86/1D2B1Vயில் அடங்கியதும் அதன் பகுதியுமான மனை எண்.24ல் கட்டப்பட்டுள்ளத் தரைத்தளக் கட்டிடம், தளப்பரப்பு 1505 சதுர அடி உடன் மொத்த நிலப்பரப்பு 6534 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. இதன் **நான்கு எல்லைகள் :** கோபால் வீட்டுக்கு வடக்கு, S.C.செல்வமுத்து வீட்டுக்குத் தெற்கு, 40 அடி அகல பிருந்தாவன் ரோட்டுக்குக் கிழக்கு, மனை எண்.23ல் உள்ள ராமசாமி கவுண்டர் வீட்டுக்கு மேற்கு.

சட்டத்துறை
கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெடெநட்.,
கோடக் இன்ஃபினிட்டி, 5வது தளம், பில்டிங் எண்.21,
இன்ஃபினிட்டி பார்க், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை எதிரில்,
ஜெனரல் A K வைத்யா மார்க், மலாட் (கிழக்கு), மும்பை – 400 097,
போன் : +91 22 66055570 / 5549 / 5544
1. rajarshi.chatterjee@kotak.com
2. sathishs.kumar@kotak.com
3.prema.a@kotak.com

கட்டுமானத் துறையில் ஈடுபட்டு வரும்
M/s. க்ரீன் வேலி'ஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின்
தீர்மான திட்டங்கள் வரவேற்பு
(தேசிய கடன் தீர்க்க வகையற்றோர் மற்றும் நொடிப்பு நிலை வாரியத்தின் ஒழுங்கு விதிகள், 2016ன் (பெருநிறுவன நபர்கள் நொடிப்பு நிலை செயல்முறை தீர்மானம்) ஒழுங்கு விதி 36A துணை விதி (1)ன் கீழ்)

	தொடர்புடைய தகவல்கள்	
1	பெருநிறுவன கடனாளர் பெயர் PAN / CIN / LLP எண்.	M/s. க்ரீன் வேலி'ஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் CIN: U45201TN2004PTC052266 PAN: AACCG0749F
2	பதிவு அலுவலக முகவரி	எண். 9, 1வது தளம், பிஷப் வால்ஸ் அவென்யூ (கிழக்கு), மயிலாப்பூர், சென்னை தமிழ்நாடு 600004
3	இணையதள URL	https://greenvalleys.in/
4	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	திவால்நிலை தொடங்கும் தேதியில் (ICD), நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ளன.
5	முக்கிய தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	நிறுவனத்தின் திட்டங்கள்: ஜிவிஎஸ்பிஎல் ரஷா, ஜிவிஎஸ்பிஎல் ராஜகுரு, க்ரீன் க்ரெஸ்ட், ஜிவிஎஸ்பிஎல் மஹாமேரு, க்ரீன் பார்க், ஜிவிஎஸ்பிஎல் க்ரீன் கவுண்டி.
6	கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட முக்கிய தயாரிப்புகள் / சேவைகளின் அளவு மற்றும் மதிப்பு	கடைசியாக கிடைத்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி 2019-20 நிதி ஆண்டின் வருவாய் ரூ.24,10,06,047.82/-
7	பணியாளர்கள் / ஊழியர்களின் எண்ணிக்கை	15 ஊழியர்கள் (திட்டம் நடைபெறும் இடங்களில் உள்ளவர்கள் உட்பட)
8	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன் வழங்கியவர்களின் பட்டியல்கள், செயல்முறையின் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கான தொடர்புடைய தேதிகள் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் இங்கே கிடைக்கின்றன:	eoi.gvspl@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைப் பெறலாம்
9	குறிமீடு பிரிவு 25(2)(h)–ன் கீழ் தீர்மான விண்ணப்ப தாரர்களுக்கான தகுதி இங்கே கிடைக்கிறது:	eoi.gvspl@gmail.comக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைப் பெறலாம் விருப்ப வெளிப்பாடு நிறுவனம் முழுவதற்குமாக அல்லது திட்டம்/களுக்காக சமர்ப்பிக்கப்படலாம்.
10	விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான கடைசி தேதி	07 ஜூன் 2024
11	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி	10 ஜூன் 2024
12	தற்காலிகப் பட்டியலில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	15 ஜூன் 2024
13	வருங்காலத் தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி	17 ஜூன் 2024
14	தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி, மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தீர்வு திட்டங்களுக்கான கோரிக்கை	18 ஜூன் 2024
15	தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	18 ஜூலை 2024
16	EOIஐ சமர்ப்பிப்பதற்கான மின்னஞ்சல் முகவரி	eoi.gvspl@gmail.com

தேதி : 23.05.2024
இடம் : சென்னை

ஒப்பம்/–
அனுஜா பட்
நியமிக்கப்பட்ட இயக்குனர்
M/s வாட்டர்ஃபால் இன்சால்வென்சி புரொபெஷனல்ஸ் பிரைவேட் லிமிடெட்
க்ரீன் வேலி'ஸ் ஷெல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் தீர்மான நிபுணர்
பதிவு எண்: IBBI/IPE-0022/IPA-1/2022-23/50016
AFA: AA1/50016/02/171224/20006 valid upto 17.12.2024
பதிவு அலுவலகம்: 1204/1221, மேக்கர் சேம்பர் V, ஜம்னாலால் பஜாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை 400021.

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
(Kotak Mahindra Bank)
பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051,
கிளை அலுவலகம் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், 2வது தளம், ஸ்ரீனிவாஸ் பவன், அவினாசி சாலை, கோயம்புத்தூர் 641 018

சர்பாசி சட்டம், 2002 பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்கள் ஆகியோராகிய நீங்கள் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை (பத்திரங்கள்) அடமானம் வைத்து வங்கி/நிதி நிறுவனங்களில் கடன் வசதியை பெற்றீர்கள். அந்த தொகையை நீங்கள் செலுத்தத் தவறியதால், உங்கள் கடன்கள் செயல்படுத்தப்படாத ஆஸ்திகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் மேற்சொன்ன கடனுக்காக நீங்கள் அளித்துள்ள ஆவணங்களின்படி உங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய அனைத்து பாக்கிகள், பலன்கள் உரிமைகள் ஆகியவற்றை பெற நீங்கள் அடமானமாக வைத்த கீழ்க்கண்ட அசையா சொத்தின் பத்திரங்கள் ஒப்பந்தப்படி கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஒப்பந்தப்படி மற்றும் செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை பெறுவதற்காக கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சட்டம்), பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீசை வங்கி அனுப்பி இருந்தது. சட்டப்பிரிவு 13(2) மற்றும் கடனீட்டு உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன்படி மாற்று சேவையாக அதன் விவரங்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன. கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்கள், உத்தரவாததாரர்கள், பத்திரங்கள், செலுத்த வேண்டிய பாக்கித் தொகை, பிரிவு 13(2)ன் கீழ் அனுப்பப்பட்ட டிமாண்ட் நோட்டீஸ் மற்றும் கோரப்பட்டுள்ள தொகை ஆகிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

கடன்தாரர், உடன்கடன்தாரர் பெயர், முகவரி மற்றும் கடன் கணக்கு எண் மற்றும் கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. கடன் வழங்கியவர் பெயர் 2. ஒப்பந்த தேதி 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. பாக்கி தொகை, குறாவில்
